# ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள்

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## கமத்தொழில், கால்நடை வளம், காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

IWWRMP

# ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP) செயற்றிட்ட முகாமைத்துவப் பணிமனை

(கடன் இல. : IDA-6621-LK)

| ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இல. | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|
| **NPC –ID** இற்கு தனிப்பட்ட ஆலோசகர்களை பணிக்கமர்த்துதல் (தொழில்நுட்ப அதிகாரி)<br>LK-MoMDE-(512490,512493-512500)-CS-INDV | 08 |
| **NPC –ID** இற்கு தனிப்பட்ட ஆலோசகர்களை பணிக்கமர்த்துதல் (படவரைஞர்)<br>LK-MoMDE-(512501,512502,512504,512505)-CS-INDV | 04 |
| நீர்நிலை மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்காக தனிப்பட்ட ஆலோசகர்களை பணிக்கமர்த்துதல் (சிவில் பொறியியலாளர்)<br>LK-MOMDE-512507,512515-CS-INDV | 02 |
| நீர்நிலை மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்காக தனிப்பட்ட ஆலோசகர்களை பணிக்கமர்த்துதல் (தொழில்நுட்ப அதிகாரி)<br>LK-MOMDE-512509,512514-CS-INDV | 02 |
| **IWWRMP**இற்கு தனிப்பட்ட ஆலோசகர்களை பணிக்கமர்த்துதல் (கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிபுணர்)<br>LK-MOMDE-524045-CS-INDV | 01 |

1. இலங்கை சனநாயக, சோசலிசக் குடியரசானது உலக வங்கியிடமிருந்து ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டத்திற்கான (IWWRMP) கிரயச் செலவுகளுக்கான நிதி வசதியைப் பெற்றுள்ளது. இதன் ஒரு பகுதியை ஆலோசனை சேவைகளுக்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.
2. பெறுகை நிறுவனம் இப்போது தொடர்புடைய தனிப்பட்ட ஆலோசகர்களை குறிப்பு விதிமுறைகளில் (TOR) குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதற்கு தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்த அழைக்கிறது. நீங்கள் விரும்பினால், விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு, CV உட்பட ஆர்வத்தின் வெளிப்பாட்டை கீழே உள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.
3. IWWRMP இற்கான ஆவணங்களைத் தயாரிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டவுடன், குறிப்பு விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை ஆலோசகர்கள் பூர்த்தி செய்ய வேண்டும்.
4. ஆலோசகரின் அனுபவமும் தகுதிகளும் குறிப்பு விதிமுறைகளில் பட்டியலிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க வேண்டும் (https://www.iwwrmp.lk/web/procurement/section/procurement-notices என்ற இணையதளத்தில் உள்ளன). மதிப்பீடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தனிப்பட்ட ஆலோசகரின் தொடர்புடைய தகுதிகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் இருக்கும்.

   அ) ஆலோசகரின் கல்வித் தகைமைகள் மற்றும் மேலதிக தகைமைகள்
   ஆ) ஒட்டுமொத்த அனுபவம் மற்றும் பணிக்குப் பொருத்தமான அனுபவம் மற்றும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற வெளிநாட்டு நிதியிடல் திட்டங்களில் உள்ள அனுபவம்
   இ) பிராந்தியம் மற்றும் மொழியில் அனுபவம் அல்லது இதனையொத்த தன்மையில் அனுபவம்.

5. அழைப்பிற்கு பதிலளிக்க ஆர்வமுள்ளவர்களிடமிருந்து தனிப்பட்ட ஆலோசகர் தேர்ந்தெடுக்கப்படுவார். வேட்பாளர்களில் மிகவும் அனுபவம் வாய்ந்தவராகவும் சிறந்த தகுதியைக் கொண்ட, பணியைச் செய்ய முழுமையான தகுதி பெற்றவராக இருக்கும் தனிப்பட்ட ஆலோசகரின் தகுதிகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.
6. 2016 ஜூலை மாதம் திகதியிடப்பட்ட 2017 நவம்பர் மற்றும் 2018 ஆகஸ்ட் மாதங்களில் திருத்தப்பட்ட உலக வங்கியின் "IPF கடன் வாங்குபவர்களுக்கான பெறுகை விதிமுறைகள்" வழிகாட்டியின் பிரகாரம் ''தனிப்பட்ட ஆலோசகர்களின் போட்டி ரீதியிலான தெரிவு" அடிப்படையில் தெரிவு அடிப்படையைப் பின்பற்றி ஒரு ஆலோசகர் தெரிவு செய்யப்படுவார்.
7. 2016 ஜூலை மாதம் திகதியிடப்பட்ட 2017 நவம்பர் மற்றும் 2018 ஆகஸ்ட் மாதங்களில் திருத்தப்பட்ட உலக வங்கியின் "IPF கடன் வாங்குபவர்களுக்கான பெறுகை விதிமுறைகள்" பிரிவு III, பத்திகள், 3.14, 3.16 மற்றும் 3.17 மற்றும் உலக வங்கியின் ஆர்வ முரண்பாட்டுக் கொள்கை என்பவற்றை ஆர்வமுள்ள ஆலோசகர்களின் கவனத்திற்கு முன்வைக்கின்றது.
8. 2026 ஜனவரி நடுப்பகுதியில் சேவை தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
9. ஒப்பந்தத்தின் கீழ் பேச்சுவார்த்தை மற்றும் ஆர்வ வெளிப்பாடு தயாரிப்பு செலவுகள் பணிக்கான நேரடி செலவினங்களாக மீளளிக்கப்பட மாட்டாது என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.
10. ஆர்வமுள்ள ஆலோசகர்கள் மேலதிக தகவல்களை சிரேஷ்ட செயற்றிட்ட நிபுணர் (பெறுகைகள் மற்றும் ஒப்பந்தங்கள்) அவர்களிடமிருந்து பின்வரும் முகவரியில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் (+94 112691163) மின்னஞ்சல்: iwwrmp@sltnet.lk மூலம் வார நாட்களில் மட்டும் பெற்றுக்கொள்ளலாம்.
11. தயவுசெய்து, 2025-12-29ஆம் திகதி அல்லது அதற்கு முன் CV சகிதம் ஆர்வ வெளிப்பாடுகளை மேற்கூறிய முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் மூலமாக அனுப்பவும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட முகாமைத்துவப் பணிமனை,**
**ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து பிரதேச மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**2 வது மாடி, மகாவலி நிலையம்,**
**இல. 96, ஆனந்த குமாரசாமி மாவத்தை,**
**கொழும்பு 07, இலங்கை.**
**தொலைபேசி: + 94-112691163**
2025 டிசம்பர் 12.